செ.வெ.எண்:53/ஜனவரி நாள்: 30.01.2016

# இராமநாதபுரம் மாவட்டம் 61-ஆவது SGFI தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டியினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழக பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் இராமநாதபுரம் மாவட்டம் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியில் 61-ஆவது SGFI தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டியினைத் தொடர்ந்து கேரம் விளையாட்டுப் போட்டியினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று இன்று (30.01.2016) தொடங்கி வைத்தார். இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா அவர்கள் முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாணவ, மாணவியர்களின் கல்வி வளர்ச்சியே நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் என்ற நோக்கத்தில் கல்வித்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மாணவ, மாணவியர்களின் கல்விக்காக மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் அவர்களின் ஆர்வத்தினை ஊக்குவித்து தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்திடும் ஏதுவாக விளையாட்டுத் துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகத்திற்கு பெருமை சேர்த்திடும் வகையில் உலக செஸ் சாம்பியன் போட்டியினை தமிழகத்தில் நடத்தி சிறப்பித்துள்ளார்கள். மேலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வீரர், வீராங்கணைகளுக்கு பரிசுகளும், பதக்கங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காக கிரிக்கெட் விளையாட்டு மைதானம் அமைத்திட 14 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. ரூபாய் 6 கோடியே 50 இலட்சம் செலவில் உலகத்தரத்தில் செயற்கை புல் ஹாக்கி விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கிரிக்கெட், ஹாக்கி விளையாட்டிற்கான விளையாட்டு விடுதி புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. கூடைப்பந்து மைதானம் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது. மேலும் கேரம் மற்றும் செஸ் உள் விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டு வருகின்றன. பள்ளிக்கல்வித்துறை சார்பாக தேசிய அளவிலான கேரம் போட்டி தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியில் 30.01.2016 முதல் 03.02.2016 வரை 5 நாட்கள் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் ஆந்திரப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, சட்டீஸ்கர், குஜராத், அரியாணா, தெலுங்கானா, பாண்டிச்சேரி, தமிழ்நாடு மற்றும் வித்தியபாரதி ஆகிய 11 மாநிலங்களிலிருந்து 14,17 மற்றும் 19 வயதிற்குட்பட்ட 251 பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொள்கின்றனர். இப்போட்டிகளில் அனைவரும் சிறப்பாக கலந்து கொண்டு தங்களது முழு திறமைகளை வெளிப்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஜெயக்கண்ணு, தமிழ்நாடு ஹாக்கி சங்கத் தலைவர் திரு.செல்லத்துரை அப்துல்லா, செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரி தாளாளர் திரு.சின்னத்துரை அப்துல்லா, கிருஷ்ணா இண்டர்நேஷனல் பள்ளி தாளாளர் திரு.கணேசகண்ணன், சென்னை முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் திரு.மா.கலைச்செல்வன், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் முனைவர்.எஸ்.பிரசாத் (இராமநாதபுரம்), திரு.திருநாவுக்கரசு (நாமக்கல்), திரு.சந்திரன் (அரியலூர்), SGFI கண்காணிப்பாளர்கள் திரு.கார்ஸ் (சட்டீஸ்கர்), திரு.தினேஷ்சிங் (ஆக்ரா), திரு.அட்டுல் சன்கில் (ஆக்ரா), உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி வீரர், வீராங்கணைகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**